# ஆராய்ச்சி ஒருமைப்பாடு குறித்த சிங்கப்பூர் அறிக்கை

**முன்னுரை. ஆராய்ச்சியின் மதிப்பு மற்றும் நன்மைகள் ஆகியவை ஆராய்ச்சியின் ஒருமைப்பாட்டை மிக முக்கியமான அடிப்படையாகக் கொண்டுள்ளன. ஆராய்ச்சிக்கான ஏற்பாடு மற்றும் அது நடத்தப்படும் விதம் ஆகியவற்றில் தேசிய மற்றும் ஒழுங்குமுறை வேறுபாடுகள் இருந்தாலும், ஆராய்ச்சி பொறுப்பேற்கப்படும் இடமெங்கும் அதன் ஒருமைப்பாட்டுக்கான அடிப்படையான கொள்கைகள் மற்றும் தொழில்முறையான கடமைகளும் கடைபிடிக்கப்படவே செய்கின்றன.**

## கொள்கைகள்

ஆராய்ச்சியின் அனைத்து அம்சங்களிலும் ***நேர்மை***

ஆராய்ச்சி நடத்தப்படும் விதத்தில் ***பொறுப்புடைமை***

மற்றவர்களுடன் இணைந்து பணியாற்றுகையில் ***தொழில்முறையிலான பணிவன்பு மற்றும் நியாய உணர்வு***

மற்றவர்கள் சார்பான ஆராய்ச்சியின் ***சிறந்த கடப்பாடு***

## கடமைகள்

***1. ஒருமைப்பாடு:*** ஆராய்ச்சியாளர்கள் தங்கள் ஆராய்ச்சியின் நம்பகத் தன்மைக்காக பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

***2. ஒழுங்குமுறைகளுக்கு இணங்கி நடத்தல்:*** ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சி தொடர்பான ஒழுங்குமுறைகள் மற்றும் கொள்கைகளை அறிந்து கொண்டு அதற்கிணங்க நடந்துகொள்ள வேண்டும்

***3. ஆராய்ச்சி முறைகள்:*** ஆராய்ச்சியாளர்கள் பொருத்தமான ஆராய்ச்சி முறைகளான, சான்று மற்றும் அறிக்கைக் கண்டுபிடிப்புகளின் மாறுநிலை பகுப்பாய்வு குறித்த அடிப்படை முடிவுகளையும் பொருள் விளக்கங்களையும் முழுமையாகவும் பாரபட்சமின்றியும் கடைபிடிக்க வேண்டும்.

***4. ஆராய்ச்சிப் பதிவுகள்:*** ஆராய்ச்சியாளர்கள் தங்களுடைய பணியை மற்றவர்கள் சரிபார்ப்பதற்கும் நகலாக்கம் செய்வதற்கும் அனுமதிக்கும் வகையில் அனைத்து ஆராய்ச்சிப் பதிவுகளையும் தெளிவாகவும், துல்லியமாகவும் வைத்துக் கொள்ள வேண்டும்.

***5. ஆராய்ச்சி கண்டுபிடிப்புகள்:*** முன்னுரிமை மற்றும் உரிமைக் கோரல்களை நிறுவுவதற்கான ஒரு வாய்ப்பைத் தாங்கள் பெற்றவுடனே தரவு மற்றும் கண்டுபிடிப்புகளை ஆராய்ச்சியாளர்கள் வெளிப்படையாகவும் முறையாகவும் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

***6. பதிப்புரிமை:*** ஆராய்ச்சியாளர்கள் தங்கள் ஆராய்ச்சியின் அனைத்து வெளியீடுகள், நிதியளிப்பு விண்ணப்பங்கள், அறிக்கைகள் மற்றும் மற்ற பிரதிநிதித்துவங்கள் ஆகியவற்றுக்கான தங்களுடைய பங்களிப்புகளுக்கு பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். பதிப்புரிமை விதிகளுக்குப் பொருந்துகின்றவர்கள் மட்டுமே பதிப்பாசிரியர்களின் பட்டியல்களில் சேர்க்கப்பட வேண்டும்.

***7. வெளியீடு ஒப்புகை:*** எழுத்தாளர்கள், நிதியளிப்பவர்கள், ஆதரவாளர்கள், மற்றும் பிறர், ஆனால் பதிப்புரிமை விதிகளுக்கு பொருந்தாதவர்கள் உட்பட, ஆராய்ச்சிக்கு குறிப்பிடத்தகுந்த பங்களிப்பை அளித்தவர்களின் பெயர்கள் மற்றும் அவர்களின் பங்குபணிகள் குறித்த விவரங்களை ஆராய்ச்சியாளர்கள் வெளியீடுகளில் குறிப்பிட தெரிவிக்க வேண்டும்.

***8. சக ஆராய்ச்சியாளர் மீளாய்வு:*** ஆராய்ச்சியாளர்கள் மற்றவர்களின் பணியை மீளாய்வு செய்யும் போது நியாயமான, முறையான மற்றும் கண்டிப்பான மதிப்பீடுகளை வழங்க வேண்டும் மற்றும் இரகசியத்தன்மையைக் காக்க வேண்டும்.

***9. ஆதாய முரண்பாடு:*** ஆராய்ச்சி முன்மொழிவுகள், வெளியீடுகள் மற்றும் பொதுமக்கள் தகவல் தொடர்புகள் மற்றும் அனைத்து மீளாய்வு நடவடிக்கைகளின் நம்பகத்தன்மையை இழக்கச் செய்யக்கூடிய நிதி மற்றும் பிற ஆதாய முரண்பாடுகள் குறித்து ஆராய்ச்சியாளர்கள் வெளிப்படையாக தெரிவிக்க வேண்டும்.

***10. பொதுமக்கள் தகவல்தொடர்பு:*** ஆராய்ச்சி தொடர்பான கண்டுபிடிப்புகளின் விண்ணப்பம் மற்றும் முக்கியத்துவம் குறித்த பொது விவாதங்களில் ஈடுபடும் போது ஆராய்ச்சியாளர்கள் தங்களுடைய அறியப்பட்ட சிறப்பறிவுக்கான தொழில்முறையிலான கருத்தளிப்பை குறைத்துக் கொள்ள வேண்டும் மற்றும் தனிப்பட்ட கருத்துகளின் அடிப்படையிலான அபிப்பிராயங்களில் இருந்து தொழில்முறையிலான கருத்தளிப்புகளை தெளிவாக வேறுபடுத்திக்காட்ட வேண்டும்.

***11. பொறுப்பில்லாத ஆராய்ச்சி நடைமுறைகள் குறித்து தகவல் தெரிவித்தல்:*** அசட்டைத்தன்மை, பதிப்பாசிரியர்களை முறையின்றி பட்டியலிடுதல், முரண்படுகின்ற தரவுகள் குறித்து தெரிவிக்கத் தவறுதல், அல்லது தவறான வழி நடத்துகை பகுப்பாய்வு முறைகள் போன்ற, ஆராய்ச்சியின் நம்பகத்தன்மைக்கு ஊறுவிளைவிக்கும் திரித்துக் கூறுதல், பொய்ப்பித்தல் அல்லது கருத்துத்திருட்டு, மற்றும் மற்றபிற பொறுப்பற்ற ஆராய்ச்சி நடைமுறைகள் உள்ளிட்ட சந்தேகிக்கப்படும் வகையிலான ஏதேனும் தவறான ஆராய்ச்சி நடத்தைகள் குறித்து ஆராய்ச்சியாளர்கள் அதற்கான ஆணையங்களிடம் தகவல் தெரிவிக்க வேண்டும். ,

***12. பொறுப்பற்ற ஆராய்ச்சி நடைமுறைகளுக்கு பதில்மொழியளித்தல்:*** ஆராய்ச்சிக்கான கடமைகளைக் கொண்டுள்ள ஆராய்ச்சி நிலையங்கள், மற்றும் அதோடு பத்திரிக்கையாளர்கள், தொழில்முறையிலான அமைப்புகள் மற்றும் முகமைகள் ஆகியோர், தவறான நடத்தை மற்றும் பிற பொறுப்பற்ற நடைமுறைகளின் குற்றச்சாட்டுகளுக்கு பதில்மொழியளிப்பதற்கும் அத்தகைய நடத்தையை நல்ல நோக்கத்தில் தகவல் தெரிவிப்பவர்களை பாதுகாப்பதற்கும் நடைமுறைகளைக் கொண்டிருக்க வேண்டும். தவறான நடத்தையோ அல்லது மற்ற பொறுப்பற்ற ஆராய்ச்சி நடைமுறையோ உறுதிசெய்யப்பட்டால், ஆராய்ச்சி பதிவை சரியாக்குவது உள்ளிட்ட, பொருத்தமான நடவடிக்கைகள் முறையாக எடுக்கப்பட வேண்டும்.

***13. ஆராய்ச்சி சூழ்நிலைகள்:*** ஆராய்ச்சி நிலையங்கள் ஆராய்ச்சி ஒருமைப்பாட்டை ஆதரிக்கின்ற பணிச் சூழல்களை உருவாக்கும் வேளையில், கல்வி, தெளிவான கொள்கைகள், மற்றும் முன்னேற்றமடைவதற்கான நியதிப்படியான தரநிலைகள் ஆகியவற்றின் வாயிலாக ஒருமைப்பாட்டை ஊக்குவிக்கின்ற சுற்றுச்சூழல்களை உருவாக்கி நீடிக்கச் செய்ய வேண்டும்.

***14. சமுதாயப் பரிசீலனைகள்:*** தங்களுடைய பணியிலுள்ள இயல்பான ஆபத்துகளுக்கு எதிரான சமுதாய ஆதாயங்களை சீர்தூக்கி பார்ப்பதற்கான ஒரு நன்னெறி கடப்பாட்டை கொண்டிருக்கின்றனவா என்பதை ஆராய்ச்சியாளர்களும் ஆராய்ச்சி நிலையங்களும் அடையாளம் காண வேண்டும்.

சிங்கப்பூரில் 21-24 ஜுலை 2010ட நடைபெற்ற ஆராய்ச்சி ஒருமைப்பாடு குறித்த 2ஆவது உலக மாநாட்டின் ஒரு பகுதியாக, ஆராய்ச்சியை பொறுப்புடன் நடத்துவதற்கான ஒரு உலகளாவிய வழிகாட்டியாக ஆராய்ச்சி ஒருமைப்பாடு குறித்த சிங்கப்பூர் அறிக்கை உருவாக்கப்பட்டது. இது ஒரு ஒழுங்குமுறை ஆவணம் அல்ல மற்றும் இது இந்த மாநாட்டில் நிதியளித்த மற்றும்/அல்லது பங்கேற்ற நாடுகள் மற்றும் அமைப்புகளின் அலுவல்ரீதியான கொள்கைகளை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. ஆராய்ச்சி ஒருமைப்பாட்டுக்கு தொடர்புடைய அலுவல்ரீதியான கொள்கைகள், வழிகாட்டுதல், மற்றும் ஒழுங்குமுறைகளுக்காக பொருத்தமான தேசிய உறுப்புகள் மற்றும் அமைப்புகள் கலந்தாலோசிக்கப்பட வேண்டும்.